# குர்ஆனின் நற்போதனைகள்

எம். அமீர்ஜான், திருச்சி.

இன்னும், **"மர்யமுடைய மகன் ஈஸாவே, 'அல்லாஹ்வையன்றி என்னையும், என் தாயாரையும் இருகடவுள்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று மனிதர்களிடம் நீர் கூறினீரா?" என்று அல்லாஹ் கேட்கும் போது அவர், "நீ மிகவும் தூய்மையானவன்; எனக்கு உரிமையில்லாத ஒன்றை நான் சொல்வதற்கில்லை; அவ்வாறு நான் கூறியிருந்தால், நீ அதை நிச்சயமாக அறிந்திருப்பாய்; என் மனத்திள்ளதை நீ அறிகிறாய்; உன் உள்ளத்திலிருப்பதை நான் அறியமாட்டேன்; நிச்சயமாக நீயே மறைவானவற்றையெல்லாம் நன்கு அறிபவன்"** என்று அவர் கூறுவார்.

*அல்குர்ஆன் 5:116*

**"நிச்சயமாக மர்யமுடைய மகன் மஸிஹ் அல்லாஹ்தான்" என்று கூறியவர்களும் உண்மையாகவே காஃபிர்களாகி விட்டார்கள். எனினும் அந்த மஸிஹோ, "இஸ்ராயீலின் சந்ததிகளே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்" என்றே கூறினார். எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவனுக்கு, நிச்சயமாக அல்லாஹ் சுவனபதியை ஹராமாக்கி விட்டான். அவன் செல்மிடம் நரகம் தான். (இத்தகைய) அக்கிரமக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் ஒருவருமில்லை.**

*அல்குர்ஆன் 5:72*

**"நிச்சயமாக அல்லாஹ் (பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய இம்) மூவரில் ஒருவன்தான்", என்று கூறியவர்களும், மெய்யாகவே காஃபிர்களாகி விட்டார்கள். ஏனென்றால், (ஒரே) ஒரு ஆண்டவனைத் தவிர, வேறு நாயன் (இல்லவே) இல்லை. (ஆகவே இவ்வாறு) அவர்கள் கூறுவதிலிருந்து விலகிக் கொள்ளாவிடில் (இவ்வாறு கூறி) காஃபிர்களானவர்களைத் துன்புறுத்தும் வேதனை நிச்சயமாக வந்தடையும்.**

*அல்குர்ஆன் 5:73*

**வேதத்தையுடையவர்களில் ஒவ்வொருவரும், தான் இறப்பதற்கு முன்னதாக அவரை விசுவாசிக்காமலிருப்பதில்லை. எனினும், மறுமை நாளில், இவர்களுக்கு விரோதமாகவே அவர் சாட்சியங் கூறுவார்.** *அல்குர்ஆன் 4:159*

**"என்மீதும் என் தூதர் மீதும் ஈமான் கொள்ளுங்கள்" என்று நான் ஹவாரிய்யூன் (சீடர்)களுக்கு தெரிவித்த போது, அவர்கள், "நாங்கள் ஈமான் கொண்டோம்! நிச்சயமாக நாங்கள் முஸ்லிம் (அல்லாஹ்வுக்கு வழிப்பட்வர்கள்) என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்"** என்று கூறினார்கள்.

*அல்குர்ஆன் 5:111*

நபிமார்(கள் மூலம் உங்கள் மூதாதையர்)களிடம் அல்லாஹ் வாக்குறுதி வாங்கிய சமயத்தில் (அவர்களை

நோக்கி) “வேதத்தையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுத்திருக்கின்றேன். இதற்கு பின்னர் உங்களிடமுள்ளதை உண்மைப்படுத்தும் ஒரு தூதர் உங்களிடம் வருவாரேயானால், அவரை நீங்கள் உண் மையாக விசுவாசித்து, நிச்சயமாக உதவி செய்யவேண்டும்” (என்று கூறி) “இதனை நீங்களும் உறுதிப டுத்தினீர்களா? என்னுடைய இக்கட்டளையை எடுத்துக் கொண்டீர்களா?” என்று கேட்டதற்கு, அவர்கள், “நாங்கள் (அதனை) அங்கீகரித்துக் கொண்டோம்” என்றே கூறினார்கள். அதற்கு (இறைவன் இதற்கு) நீங்கள் சாட்சியாயிருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாயிருக்கின்றேன்” என்று கூறினான்.

*அல்குர்ஆன் 3:81*

இதற்கு பின்னரும் எவரேனும் புறகணித்தால், நிச்சயமாக அவர்கள் பாவிகள் தான்.

*அல்குர்ஆன் 3:82*

எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம்தூதரைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராதிலிரும், இன்ஜிலிரும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். அவர்கள், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார்; பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார்; தூய்மையான ஆகாரங்களையே அவர்களுடைய ஆகுமாக்குவார்; கெட்டவற்றை அவர்களுக்கு தடுத்தும் விடுவார். அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் (கடினமான கட்டளைகளை யும்) இறக்கிவிடுவார்; எனவே எவர்கள் அவரை மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளி மயமான (வேதத்)தையும் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தாம் வெற்றிபெறுவார்கள். *அல்குர்ஆன் 7:157*

(மூஸா(அலை), ஈஸா(அலை) அவர்கள் மீது) நன்னம்பிக்கை கொண்ட (யூத, கிறித்தவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். இன்னும், அவனுடைய (இறுதித்) தூதரையும் விசுவாசியுங்கள் அவன் உங்களுக்குத் தன்னுடைய அருட்கொடையிலிருந்து (மூஸா(அலை) ஈஸா நபிகளை விசுவாசங் கொண்டதற்கு ஒரு பங்கும் நபி(ஸல்) அவர்களை விசுவாசம் கொண்டதற்கு ஒரு பங்குமாக) இரண் டு பங்கைக் கொடுப்பான். இன்னும், அவன் உங்களுக்குப் பிரகாசத்தையும் கொடுப்பான். அதனைக் கொண்டு நீங்கள் (நேரான வழியில்) செல்வீர்கள். இன்னும், அவன் (நீங்கள் செய்த பாவங்களுக்காக) உங்களை மன்னிப்பான். இன்னும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும் அன்புடையோனாகவுமிருக்கின்றான்.

*அல்குர்ஆன் 57:28*

பின்னர் நாம் நமது (அநேக) தூதர்களை அவர்களுடைய (நூஹ், இப்ராஹீமுடைய) அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி செய்தோம். மேம், நாம் மர்யம்(அலை) குமாரர் ஈஸாவை (அவர்களைப்) பின்பற்றும்படி செ ய்தோம். நாம் அவருக்கு இன்ஜில் என்ற வேதத்தையும் கொடுத்தோம். இன்னும், நாம் அவரை பின்பற்றியவர்களுடைய இதயங்களில் அன்பையும், கருணையும் உண்டாக்கினோம். இன்னும், துறவறமாகிய (பாதிரி வாழ்க்கையை) நாம் அவர்கள்மீது கடமையாக்கவில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவிரும்பி, அவர்களே அதைக் கற்பனை செய்துக்கொண்டார்கள். ஆனால், அவர்கள் அதைச் சரியான முறைப்படி அனுஷ்டிக்கவில்லை. ஆகவே நாம் அவர்களில் எவர்கள் விசுவாசம்

**கொண்டார்களோ, அவர்களுடைய கூலியை அவர்களுக்குக் கொடுப்போம். இன்னும், அவர்களில் அநேகர் வரம்பு மீறினவர்களாக இருக்கின்றனர்.** *அல்குர்ஆன் 57:27*

யூதர்களும், கிறிஸ்தவர்களும் **“நாங்கள் அல்லாஹ்வின் குமாரர்கள் என்றும்; அவனுடைய நேசர்கள்” என்றும் கூறுகிறார்கள். அப்படியாயின் உங்கள் பாவங்களுக்காக உங்களை அவன் ஏன் வேதனைப் ப டுத்துகிறான். அப்படியல்ல! “நீங்கள் அவன்படைத்தவற்றைச் சேர்ந்த மனிதர்கள்தாம்” என்று (நபியே) நீர் கூறும். தான் நாடியவர்களை அவன் மன்னிக்கின்றான். தான் நாடியவர்களைத் தண்டிக்கவும் செ ய்கின்றான். இன்னும், வானங்களிம் பூமியிம், அவற்றிற்கிடையேயும் இருக்கும் எல்லாவற்றின் மீதுமுள்ள ஆட்சி அவனுக்கே உரியது; மேம், அவன் பக்கமே (எல்லோரும்) மீள வேண்டியிருக்கின்றது.**

*அல்குர்ஆன் 5:18*

**வேதத்தையுடையவர்களே! இப்ராஹீமைப் பற்றி (அவர் யூதராகவோ அல்லது கிறிஸ்துவராகவோ தான் இருந்தாரென்று) ஏன் வீணே தர்க்கம் செய்து கொள்கின்றீர்கள். தவ்ராதும், இன்ஜிம், அவருக்கு (வெகு காலத்திற்குப்) பின்னரே அருளப்பட்டன. (இதை கூட) நீங்கள் அறிந்து கொள்ளவேண்டாமா?**

*அல்குர்ஆன் 6:65*

**இப்ராஹீம், யூதராகவோ இருக்கவில்லை. கிறிஸ்துவராகவும் இருக்கவுமில்லை. எனினும், இறைவனுக்கு முற்றிம் வழிப்பட்டு நேரான முஸ்லிமாகவே இருந்தார். அன்று அவர் இணை வைத்து வணங்குபவராகவும் இருக்கவில்லை.**

*அல்குர்ஆன் 3:67*

**நிச்சயமாக இப்ராஹீமுக்கு மனிதர்களில் நெருங்கியவர் (எவரென்றால்) அவரைப் பின்பற்றியோரும், இந்த நபியையும் (இவரை) விசுவாசங் கொண்டவர்களும்தான். அல்லாஹ் இந்த விசுவாசிகளை இரட்சிப்போனாக இருக்கின்றான்.** *அல்குர்ஆன் 3:68*

**ஆனால், எவர் ஈமான் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களோ, அவர்களுக்குரிய நற்கூலிகளை (அல்லாஹ்) முழுமையாகக் கொடுப்பான்; அல்லாஹ் அக்கிரமம் செய்வோரை நேசிக்கமாட்டான்.** *அல்குர்ஆன் 3:57*

ஆக வேதங்கொடுக்கப்பட்ட யூத, கிறிஸ்தவர்களுக்கும், இணை வைத்து வணங்கும் ஏனைய மக்களுக்கும், இன்னும் குறிப்பாக முஸ்லிமான ஆண், பெண்களுக்கும், மூஃமினான ஆண், பெண்களுக்கும் நேரிய மார்க்கத்தில் வாழ அனைத்து புகழுக்கு சொந்தகாரனான எல்லா வல்லமையையும் தன்னகத்தே கொண் டுள்ள எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை நேரிய மார்க்கத்தில் வாழ வைப்பானாக. ஆமீன் யாரப்புல் ஆலமீன்

ஜூன் 2002 அந்நஜாத்